மருத்துவம் செய்ய வேண்டிய வாய்ப்பு, வசதி உள்ள சூழ்நிலை அவசியம் ஏற்பட்டால், மருத்துவ அதிகாரிகள் மாண்புமிகு உறுப்பினர் கூறியதன் அடிப்படையில் செயல்படுவார்கள். அவசியம் ஏற்பட்டால், அந்த நிலைக்குத் தக்கவாறு, பெரிய மருத்துவர், "டீன்" அவர்களே இந்தக் கருத்தை மனதில் கொண்டு, அவசியம் ஏற்பட்டால், தேவைப் பட்டால், அந்த வகையில் கவனிப்பார்கள் என்று கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

3. அமைச்சரின் விளக்க உரை.

அரவங்காட்டில் நடந்த துப்பாக்கிச் சூடுபற்றி நீதி விசாரணை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 82-வது விதிப்படி, அவை முன்னவர் ஒரு அறிக்கையை, பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர் களே, நீலகிரி மாவட்டம் அரவங்காட்டில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூடு பற்றி 82-வது விதியின்படி அறிக்கை வைக்கப்படுகிற வாய்ப்பின் அடிப்படை யில் இந்த அறிக்கையை பேரவையின் முன் வைக்க முன்வருகிறேன்.

1—3—68 அன்று மாலை சுமார் 5 மணிக்கு நீலகிரி மாவட்டம் குன்னூர் தாலூகா, அரவங்காடு காவல் நிலையத்தின் முன்னால் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததினால் ஐந்து பேர்கள் உயிர் இழக்க நேர்ந்தது. பல ருக்கு காயங்கள் ஏற்பட்டன என்ற செய்தி மாவட்ட ஆட்சியாளர் அவர்க ளிடமிருந்து அரசினருக்கு வந்துள்ளது.

இந்தச் சம்பவம் எந்தச் சூழ்நிலையில் எப்படி நடந்தது, போலீசார் என் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டி வந்தது என்பதுபற்றி மாவட்ட நீதிபதி ஒருவரால் விசாரணை செய்வது உசிதம் என்று அரசினர் கருது கின்றனர். அந்த முடிவையொட்டி விசேஷ அரசிதழ் ஒன்றில் அறிக்கைகள் வெளியிடப்பட இருக்கின்றன. அதன்படி திரு எஸ். கணே சன், மாவட்ட செஷன்ஸ் நீதிபதி அவர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நீதி விசாரணை செய்யும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு கமிஷன் ஆஃப் எங்க்வயரி ஆக்ட்டின்கீழ் போதிய அதிகாரங்கள் அளிக்கப் பட்டுள்ளன. அவர்கள் தீர விசாரித்துத் தக்க அறிக்கை ஒன்றை அரசுக்கு வழங்கிய பின் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

4. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(i) அரவங்காட்டில் நடந்த துப்பாக்கிச் சூடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரவங்காட்டில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் பற்றி ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு முன் அறிவிக்கைகள் வந்திருக்கின்றன. திரு. போஜன், திரு. பெள்ளி கவுடர், திரு. பொன்னப்ப நாடார், திரு. ராமமூர்த்தி, திரு. கோதண்டராமன், திரு. எ. கே. சுப்பையா, திரு. சுரேந்திரன், திரு. வரதராஜன், ஆகிய எட்டு உறுப்பினர் களும் ஒற்றிவைப்புத் தீர்மான முன் அறிவிக்கைகள் கொடுத்திருக்கிறார் கள். அரவங்காட்டில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூடுபற்றி விவாதிக்க, பேரவை யின் அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். இப்பொழுது, அரசினர் தரப்பில், ஒரு நீதிபதி விசாரணை நடத்த இருப்ப தாகவும், ஒரு நீதிபதியையும் நியமித்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார் கள். ஆகவே, இந்த எட்டு ஒற்றிவைப்புத் தீர்மானங்களும், பேரவையின் விதி 67-ன் கீழ் **A Member must not give his opinion about, or refer to, any matter on which a judicial decision is pending,** என்றிருப்பதால் நீதி விசாரணைக்குரிய காரியத்தைக் குறிப்பிடக் கூடாது ; அதைப்பற்றி கருத்தையே சொல்லவும் கூடாது என்று விதி இருப்பதால், இந்த எட்டுத் தீர்மானங்களுக்கும் அனுமதி மறுக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.